**பூநகரி பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 27 ஆம் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2017 யூலை 18 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பூநகரிப் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1. கணக்காய்வுக்கு போதிய சான்றாதாரமின்மைகள்

சபையின் நடைமுறையாண்டிற்கான இரண்டு கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 46,993 பெறுமதியானவற்றுக்கு விலைப்பட்டியல் (Invoice) ஆவணங்கள் கணக்காய்வுக்குக் கிடைக்கத்தக்கனவாயிருந்திருக்காமையால் அச் செலவுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக ஏற்று சான்றுப்படுத்த முடியாதுள்ளது.

#### 1.3.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைக்கான பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பாகம் III இன் பிரிவு 24 | பிரதேசசபை ஸ்தாபிக்கப்பட்டு 3 வருடங்களுக்குள் பிரதேசசபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1988 பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள்

| | |
|---|---|
| (i) அத்தியாயம் III இன் விதி இலக்கம் 66 | வருமான நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,036,445 இனை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் V இன் விதி இலக்கம் 140 | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 இற்கான துணைக்கட்டு நிதி உரிய காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டிராமை தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் VIII இன் விதி இலக்கம் 178(3) | திறமையான ஒப்பந்த வேலைகளைச் செய்கின்ற கிராமோதய சபைகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் VIII இன் விதி இலக்கம் 178(5) | கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் போது பதிவஞ்சல் மூலமாக அல்லது தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (v) அத்தியாயம் IX இன் விதி இலக்கம 180 | காசுமற்றும் களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருக்கும் அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள்

| | |
|---|---|
| i. இலக்கம் 396(ஈ) | சபையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 06 மாதங்களுக்கு மாற்றப்படாதிருந்த காசோலைகளின் கூட்டுமொத்தம் ரூபா 73,018 தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ii. இலக்கம் 571 | 54 காலம் கடந்த வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 5,092,511 தொடர்பாக கடந்த இரு வருடங்களுக்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 டிசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,012,326 தொகையாக காணப்பட்டிருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 6,665,869 தொகை காணப்பட்டது. அதன்படி நிதி விளைவுகள் ரூபா 1,653,543 இற்கான குறைவடைந்தமையை காட்டுகின்றது.

### 2.2. வருமான முகாமைத்துவம்

#### 2.2.1. மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016<br>உள்ளபடியான வருமானம் | 31 திசெம்பரில் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரிகள் | - | 33,675 | - |
| குத்தகை, வாடகை | 3,450,030 | 1,373,999 | 602,700 |
| உரிமங்கள் | 562,600 | 665,935 | - |
| வேறு வருமானங்கள் | 38,172,394 | 25,346,451 | 2,738,658 |
| | **42,185,024** | **27,420,060** | **3,341,358** |

#### 2.2.2. முத்திரைக் கட்டணங்கள்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டிருந்திருக்க வேண்டிய சபைக்குரிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,330,844 இனை கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகளாக அறவீடுசெய்ய சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3. பெறவேண்டியவை

அரசிறைக் கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டிருந்த ரூபா 508,360 பெறுமதியான 07 வருமான விடயங்கள் உரிய காலப்பகுதியில் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராது 01 தொடக்கம் 06 ஆண்டுகள் வரையான காலப்பகுதிகளில் அரசிறைக் கடனாளிகள் கணக்கில் நிலுவையாக காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.4. தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்

17 ஏப்ரல் 2009 திகதியிடப்பட்ட 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 04 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான நான்கு வகையான கட்டணங்களை மீளாய்வாண்டில் உரியவாறு அறவீடுசெய்ய சபையால் நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிராமை

அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கட்டணங்களின் கூட்டுமொத்தப் பெறுமதியும் கணிப்பீடு செய்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவுமில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்றிறனின்மை

1 வருடம் முதல் 7 வருடங்கள் வரையான காலப் பகுதியில் பயன்படுத்தப்படும் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த 32 வாகனங்கள் தொடர்பான உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 பதவியணி வெற்றிடங்கள்

சபையினது 27 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காததுடன், அதன் காரணமாக சபையின் கடமைகள் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது.

### 3.3 செயற்றிட்டத் தாமதங்கள்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் முன்னெடுக்கப்பட்டிருந்த 07 செயற்திட்டங்களின் கூட்டுமொத்தம் ரூபா 3,124,734 தொகைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இத்தகைய வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தனவேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொண்டிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையினால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 14,764,964 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டுச் செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 17,000,560 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-------------------------------------------------------------

கீழ்வரும் விடயங்கள் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. நிலுவைகளின் அறவீடு

ii. வாகனங்களின் பயன்படுத்துகை

iii. ஒப்பந்த நிர்வாகம்

iv. அரசிறைப் பதிவேடுகள்

v. ஆளணியினரின் மேற்பார்வை